# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**********

**முறையீட்டு மனு எண்கள்.085, 85(A) மற்றும் 85 (B)/2019/பே**
**ஆணை நாள் 04–09–2019**

திரு. ரா.ஸ்ரீதர் (எ) கிருஷ்ணன்,
மனை எண்.62–A. 14-வது தெரு,
தியகராஜநகர்,
திருநெல்வேலி–627011. — முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். — எதிர் மனுதாரர்.

**ஆணை**

திருநெல்வேலி மாவட்டம், தியகராஜநகர், 14–வது தெரு, 62–ஏ எண்ணுள்ள முகவரியில் வசிக்கும் திரு.ரா. ஸ்ரீதர் (எ) கிருஷ்ணன் என்பவரது நாளிடப்படாத மூன்று முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 21.05.2019 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனுக்கள் முறையே எண்.85, 85-A மற்றும் 85-B/2019 என எண்ணிடப்பட்டன. முறையீட்டு மனுக்கள் மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர், தான் மேற்கண்ட முகவரியில் வசிப்பதாகவும், தனக்கும், தனது சகோதரர்கள் மற்றும் தனது தாயாருக்கும் கூட்டு பாத்தியமான வீடு திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி மெயின் ரோடு கதவு எண். 12–7–1A–ல் (பழைய எண். 2–2–1A) என்ற இடத்தில் உள்ளதாகவும், மேற்கண்ட பகுதியில் மழைக்காலங்களில் நிலக்கோட்டை பிரதான நகர்ப் பகுதியில் பெய்யும் மழை நீர் பிரதான கழிவு நீர் வாய்க்கால் வழியாக செல்வதாகவும், மேற்படி கழிவு நீர் வாய்க்கால் சில ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி கால்வாயில் மழை நீர் செல்வது தடைசெய்யப்பட்டு, தற்போது கழிவுநீர் வெளியேறுவது தடைபட்டு சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும், செயல் அலுவலரிடம் நேரிடையாக முறையிட்டும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லையென்றும், மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றி கழிவு நீர் தேங்காமல் இருக்கவும், தனது வீட்டின் தென்புறம் மழை நீர் வாய்க்கால் மீது கட்டப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி வாய்க்காலை சீரமைக்க உரிய உத்திரவிடக் கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 18.06.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி, 24.07.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில், திரு.வினோத் பழனிச்சாமி, திரு.ராஜேந்திரன் மற்றும் திரு.சண்முகம் ஆகியோர் நிலக்கோட்டை டவுன் பஜார் தெருவிலுள்ள நாடார் நடுநிலைப் பள்ளிக்கு முன்பாக ஆக்கிரமிப்பு செய்து மூன்று கடைகள் வைத்து பிரதான கழிவு நீரோடை வாய்க்காலை ஆக்கிரமிப்பு செய்து இருந்ததாகவும், திரு.வினோத் பழனிச்சாமி தவிர மற்ற இருவரும் தங்களது கடைகளை எடுத்து விட்டதாகவும் திரு.வினோத் பழனிச்சாமி கடை வைக்க எந்த உரிமமும் வழங்கப்படவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனக்கு தகவல் வழங்கியுள்ளதாகவும், திரு.வினோத் பழனிச்சாமி ஏற்கனவே தான் நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வாங்கிய ஆணைக்கு மேல் முறையீடு செய்து திண்டுக்கல் சார்பு நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து தடையாணை பெற்றார் எனவும், அத்தடையாணையினை எதிர்த்து மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் தான் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் (நீதிப்பேராணை எண். 3973/2019) இதில் திரு.வினோத் பழனிச்சாமி 4-வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் எனவும், மேற்படி வழக்கிற்கான வாதுரையின் நகலினை 26.07.2019க்குள் அனுப்பி வைப்பதாகவும், கழிவு நீர்க் கால்வாயில் கடைகள் கட்டி ஆக்கிரமித்துள்ளதால் சுகாதார சீர் கேடு ஏற்படுவதாகவும், எனவே அவற்றினை அகற்ற உரிய ஆணையிடுமாறும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 23.07.2019 நாளிட்ட கடிதத்தில் முறையீட்டு மனுதாரர் இடம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் தொடுத்துள்ள நீதிப்பேராணை எண். 3973/2019ல் பேரூராட்சி மற்றும் பலர் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், மேலும் திரு.வினோத் பழனிச்சாமி தான் விசாரணை என்ற பெயரில் கைது செய்யப்படாமல் இருக்க மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில், CRL.C.P.No. 8002/2019 ல் 11.06.2019 நாளிட்ட ஆணை மூலம் தடையாணை பெற்றுள்ளதாகவும் தெரிவித்து அதன் நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரர், திரு.வினோத் பழனிச்சாமி என்பவர் மீது மேற்படி கழிவு நீர் கால்வாயினை ஆக்கிரமித்து கடை கட்டியுள்ளது தொடர்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நிலக்கோட்டையில் அசல் வழக்கு எண்.160/2006 மூலம் தொடரப்பட்ட வழக்கில் 30.08.2011 அன்று மேற்படி ஆக்கிரமிப்பு செய்து ஏற்படுத்தியுள்ள கட்டுமானத்தை ஒரு மாதத்திற்குள் அகற்றப்பட வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். ஆனால் அத்தீர்ப்பாணையினை எதிர்த்து, எதிர் வாதியான திரு.எஸ்.வினோத் பழனிச்சாமி, திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு எண். 18/2012ன் மூலம் மேல் முறையீட்டு வழக்கு தொடர்ந்து 17.08.2015 நாளிட்ட நீதிமன்ற தீர்ப்பின் நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் 30.08.2011 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினை ரத்து செய்து உத்திரவு பெற்றதாக தெரிவித்து அதன் நகலினையும் முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் வழக்கு எண்.SA(MD)No. 459/2016 ல் நிலக்கோட்டை கூடுதல் சார்பு நீதி மன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு எண். 18/2012ன் மூலம் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினை ரத்து செய்ய தொடரப்பட்ட இரண்டாவது மேல் முறையீட்டு வழக்கின் வாதுரையின் நகலினை மின்னஞ்சல் மூலம் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் 29.07.019 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் மேற்படி பொருள் தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்டுள்ள நீதிப்பேராணை எண். 3973/2019-ன் நகலினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

எனவே, இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் அவரது வாக்குமூலம், இப்பொருள் தொடர்பான திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் நீதிமன்ற வழக்குகள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் கவனமுடன்

பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரரால் மாண்மை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்டுள்ள மேற்படி இரு வழக்குகளும் (S.A.(MD)No. 459/2016 மற்றும் W.P.(MD) No. 3973/2019) நிலுவையில் உள்ளன. எனவே 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b) ன்படி நீதிமன்றமொன்றின் முன் நிலுவையில் இருக்கும் பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்திடலாகாது என்ற நிலையில் இப்பொருள் தொடர்பான தொடர் விசாரணையை கைவிட முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.
–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்.
1.திரு. ரா.ஸ்ரீதர் (எ) கிருஷ்ணன்,
மனை எண்.62–A. 14–வது தெரு,
தியகராஜநகர்,
திருநெல்வேலி–627011.
2.செயல் அலுவலர்,
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திண்டுக்கல் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல்.
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்) தகவலுக்காக